வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—மலர்விழி

தேதி 13.6.2025 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

அகமதாபாத்தில் விமான விபத்து நடந்த இடத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று நேரில் சென்று பார்வையிட்டார். மருத்துவமனைக்கும் அவர் சென்று காயம் அடைந்தவர்களை சந்தித்தார்.

விமான விபத்தில் உயிர் இழந்த முன்னாள் குஜராத் முதலமைச்சர் விஜய் ரூபானியின் குடும்பத்தினரையும் பிரதமர் சந்தித்து ஆறுதல் கூறினார்.

ஏர்-இண்டியா விமானம் விபத்துக்குள்ளானது குறித்து, விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

புதுச்சேரியில் மீன்பிடி தடைக்காலம் முடிந்து கடலுக்குச் செல்லும் விசைப் படகுகளை முதலமைச்சர் திரு ரங்கசாமி வழி அனுப்பி வைத்தார்.

*மோடி-குஜராத்*

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று காலை குஜராத் மாநிலம் அகமதாபாத், சிவில் மருத்துவமனையில், ஏர்-இண்டியா விமான விபத்தில் காயம் அடைந்தவர்களை நேரில் சென்று பார்த்தார். அகமதாபாத் விமான விபத்து குறித்து நாடே துயரம் அடைந்திருப்பதாக, பின்னர் சமூக ஊடகத்தில் வெளியிட்ட பதிவில் அவர் கூறினார். ஒரேநேரத்தில் இத்தனை உயிர்கள் திடீரென இழக்கப்பட்டது, வார்த்தைகளால் விவரிக்க முடியாத அளவிற்கு, இதயத்தை நொறுக்கக் கூடியது என்றும் அவர் தெரிவித்தார். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துக் கொள்வதாகவும் இவர்களின் வேதனையை அரசு நன்றாகவே புரிந்து கொள்வதாகவும் பிரதமர் கூறி உள்ளார். பிரதமரின் அகமதாபாத் பயணம் குறித்து கூடுதல் விவரங்கள்

**(வாய்ஸ்)**

*மோடி-குஜராத்*

**(வாய்ஸ்)**

ஏர்-இண்டியா விமான விபத்தில் ஒரே நபராக தப்பிப் பிழைத்து, அகமதாபாத் தனியார் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்று வரும், இந்திய வம்சாவளி பிரிட்டீஷ் பிரஜை **விஸ்வாஸ் குமார் ரமேஷை**, பிரதமர் திரு நரேந்திர மோடி மருத்துவமனையில் நேரில்

சென்று பார்த்தார். கொடுமையான தனது அனுபவங்களையும், விமான விபத்தில் தான் தப்பியது எப்படி என்பது குறித்த விவரங்களையும், திரு ரமேஷ் பகிர்ந்து கொண்டார்.

முன்னதாக பிரதமர் திரு நரேந்திர மோடி, விமான விபத்து நடந்த இடத்தை நேரில் சென்று பார்வையிட்டார். விபத்தில் பகுதியில் காணும் நிலவரங்கள் மிகவும் துயரகரமானவை என்று பின்னர் சமூக ஊடகப் பதிவு ஒன்றில் அவர் தெரிவித்தார். கற்பனைக்கும் எட்டாத இந்த விபத்தில், அன்புக்குரியவர்களை இழந்தவர்கள் பற்றிய சிந்தனையில் தாம் ஆழ்ந்திருப்பதாக அவர் கூறி உள்ளார்.

விபத்தை தொடர்ந்து பல்வேறு பணிகளில் அயராது ஈடுபட்டு வரும் அதிகாரிகள் மற்றும் குழுக்களையும் பிரதமர் சந்தித்துப் பேசினார். பின்னர் அகமதாபாத்தில் மறுஆய்வுக் கூட்டம் ஒன்றை அவர் நடத்தினார். விமான விபத்தில் உயிர் இழந்த முன்னாள் குஜராத் முதலமைச்சர் விஜய் ரூபானியின் குடும்பத்தினரையும் பிரதமர் சந்தித்தார்.

*மோடி-குஜராத்*

கடினமான தருணங்கள் உட்பட பல்வேறு சந்தரப்பங்களில் விஜய் ரூபானியுடன் தோளோடு தோள் நின்று தாம் பணியாற்றி இருப்பதாகவும், கட்சியின் கொள்கைகளில் உறுதியான நம்பிக்கை கொண்ட, மிக எளிமையான, கடின உழைப்பாளி, விஜய் ரூபானி என்றும், சமூக ஊடகத்தில் பிரதமர் கூறி உள்ளார்.

இதற்கிடையே, விபத்தில் பலியானவர்களில் அடையாளம் காணப்பட்ட உடல்கள், பிரேத பரிசோதனைக்கு பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன. இதுவரை 6 உடல்கள் இவ்வாறு ஒப்படைக்கப் பட்டுள்ளன. அகமதாபாத்தில் இருந்து நேற்று லண்டனுக்கு புறப்பட்ட ஏர் இண்டியா விமானம், சில நிமிடங்களிலேயே கட்டுப்பாட்டை இழந்து, குடியிருப்பு வளாகம் ஒன்றின் மீது விழுந்து நொறுங்கியதால் ஏற்பட்ட விபத்தில், விமான சிப்பந்திகள் 12 பேர் உட்பட, 241 பேர் உயிரிழந்தனர்.

*விபத்து-விசாரணை*

குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் நேற்று ஏர்-இண்டியா விமானம் விபத்துக்குள்ளானது குறித்து, விசாரணை நடைபெற்று வரும் நிலையில், விபத்து நடந்த இடத்தில் பாதுகாப்பு ஏஜன்சிகள் தீவிர தேடுதல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். சம்பந்தப்பட்ட பகுதியில் இருந்து **டிஜிட்டல் வீடியோ பதிவுக் கருவி** ஒன்றை, குஜராத் மாநில காவல் துறையின் தீவிரவாத எதிர்ப்பு பிரிவினர் கைப்பற்றி உள்ளனர். ஆயினும் **கருப்பு பெட்டி** கிடைத்துள்ளதா என்பதை, ஏர் இண்டியா நிர்வாகம், அதிகாரப்பூர்வமாக இன்னும் உறுதிப்படுத்த வில்லை.

இதற்கிடையே விபத்தில் காயமடைந்தவர்களை காப்பாற்ற முடியும் என்ற நம்பிக்கையில், பெரும் எண்ணிக்கையிலான மக்கள், இரத்தம் கொடுப்பதற்காக, அகமதாபாத் சிவில் மருத்துவமனைக்கு வந்த வண்ணம் உள்ளனர். இந்திய ராணுவமும், அகமதாபாத் கண்டோன்மென்ட் பகுதியில், **இரத்த தான முகாம்** ஒன்றை நடத்தி உள்ளது. பாதிக்கப் பட்டவர்களுக்குத் தேவையான போக்குவரத்து மற்றும் தங்குமிட வசதிகளை, சம்பந்தப்பட்ட

துறையினர் வழங்கி உள்ளனர். அகமதாபாத் சிவில் மருத்துவமனையிலும், தேவையான வசதிகள், விரிவான முறையில் செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

*இந்தியா-சீனா*

வெளியுறவுச் செயலர் திரு விக்ரம் மிஸ்ரி, 2 நாள் பயணமாக தற்போது இந்தியா வந்துள்ள சீன துணை வெளியுறவு அமைச்சர் திரு சுன் வீடாங்-கை இன்று புதுடெல்லியில் சந்தித்துப் பேசினார். நேரடி விமான போக்குவரத்து சேவையை மீண்டும் தொடக்குவது உட்பட, இருதரப்பு உறவுகளின் மேம்பாட்டிற்கான பல்வேறு நடவடிக்கைகளை துரிதப்படுத்த, இந்த சந்திப்பின் போது இருநாடுகளும் ஒப்புக் கொண்டன. பொருளாதாரம், மற்றும் வர்த்தகம் சார்ந்த அம்சங்கள் குறித்து விரிவான முறையில் பேச்சு வார்த்தை நடத்தவும், இருநாடுகளும் ஒப்புக் கொண்டுள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

*மீன்பிடி-தொழில்*

புதுச்சேரியில் மீன்பிடி தடைக்காலம் முடிவடைவதை ஒட்டி, தேங்காய் திட்டு துறைமுகத்தில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் முதலமைச்சர் திரு ரங்கசாமி கலந்து கொண்டு, மீன்பிடி தொழிலுக்கு செல்லும் விசைப் படகுகளுக்கு சிறப்பு பூஜை செய்து மீனவர்களை வழி அனுப்பி வைத்தார். சட்டமன்ற உறுப்பினர் திரு பாஸ்கர் என்கிற தட்சிணாமூர்த்தி, மீன்வளத் துறை இயக்குநர் திரு முகமது இஸ்மாயில் மற்றும் விசைப்படகு உரிமையாளர் நலச் சங்கத்தினர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

*ரங்கசாமி-புதுநகர்*

புதுச்சேரியில் கடந்த ஆண்டு ரெட்டியார்பாளையம் புதுநகரில், விஷ வாயு தாக்குதலில் உயிரிழந்த சிறுமி செல்வராணியின் குடும்பத்திற்கு அரசு அறிவித்த 30 லட்ச ரூபாய் நிவாரண உதவியில், முதல் தவணையாக 10 லட்சம் ரூபாய்க்கான காசோலையை, இன்று, முதலமைச்சர் திரு ரங்கசாமி, சிறுமியின் குடும்பத்தினரிடம் வழங்கினார். சட்டப் பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், அரசு கொறடா திரு ஏ கே டி ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர் திரு சிவ சங்கர் ஆகியோர் உடன் இருந்தனர்.

*ஏனாம்*

ஏனாமில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் நிதி ஒதுக்கீடு மூலமான 325 இலவச மிதிவண்டிகளை, சட்டமன்ற உறுப்பினர் திரு கொல்லப்பள்ளி ஸ்ரீனிவாஸ் அசோக் இன்று, பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த 10-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு வழங்கினார். பள்ளிக் கல்வி இயக்குநரின் பிரதிநிதி திரு பிரவீன் உள்ளிட்ட அதிகாரிகளும், ஆசிரியர்களும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

*இஸ்ரேல்-ஈரான்*

இஸ்ரேலுக்கும்-ஈரானுக்கும் இடையே பதற்றம் ஏற்பட்டுள்ளது குறித்து இந்தியா கவலை வெளியிட்டுள்ளது. பதற்றம் அதிகரிப்பதை இருதரப்பினரும் தவிர்க்க வேண்டும் என்றும் இந்தியா வலியுறுத்தி உள்ளது. அணுசக்தி நிலையங்கள் மீதான தாக்குதல் பற்றிய செய்திகள் உட்பட, புதிதாக உருவாகி வரும் நிலவரங்களை இந்தியா உன்னிப்பாக கவனித்து வருவதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. இஸ்ரேல் மற்றும் ஈரானில் உள்ள இந்திய சமூகத்தினர் உள்ளூர் பாதுகாப்பு அறிவுரைகளைப் பின்பற்றி எச்சரிக்கையுடன்

இருக்க வேண்டும் என்றும் இந்நாடுகளுக்கான இந்திய தூதரகங்கள் கேட்டுக் கொண்டுள்ளன. நிலவரம் குறித்து கூடுதல் தகவல்கள்

**(வாய்ஸ்)**

*இஸ்ரேல்-ஈரான்*

**(வாய்ஸ்)**

ஈரான் மீது நேற்று இரவு இஸ்ரேல் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து, வான் பரப்பு நிலவரங்களில் மாற்றம் ஏற்பட்டு வருவதால் ஏர்-இண்டியா நிறுவனம் பல்வேறு நாடுகளுக்கான 16 சர்வதேச விமானங்களை, புறப்பட்ட இடத்திற்கே திருப்பி வரவழைத்துள்ளது, அல்லது, வேறு வழியில் திருப்பி விட்டுள்ளது. பாதிக்கப்பட்ட பயணிகளுக்கு மாற்று வசதிகள் செய்யப் படுவதாகவும், ஏற்கனவே முன் பதிவு செய்தவர்கள், **விமான சேவை நிலவரத்தை** இணையதளத்தில் தெரிந்து கொண்டு செயல்பட, அறிவுறுத்தப் படுவதாகவும், ஏர்-இண்டியா நிர்வாகம் தெரிவித்துள்ளது.

*இலங்கை கப்பல்*

தமிழகத்தின் நாகப் பட்டிணத்தில் இருந்து, இலங்கையின் காங்கேசன் துறைக்கு இயக்கப்படும் பயணிகள் கப்பல் சேவைக்கான நிதி உதவி மேலும் ஒராண்டு காலத்திற்கு நீட்டிக்கப்படுவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. இருநாடுகளுக்கும் இடையே மக்கள் நிலையிலான உறவுகளையும், பிராந்திய அளவிலான இணைப்புகளையும் வலுப்படுத்துவதில் அரசுக்குள்ள உறுதிப்பாட்டிற்கு ஏற்ப இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் தொடக்கப்பட்ட இந்த கப்பல் சேவையை இதுவரை 15 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பயன்படுத்தி உள்ளனர்.

*வானிலை*

இன்று தென்னிந்திய பகுதிகளின் மேல் வளிமண்டல கீழடுக்கு சுழற்சியும், வட கர்நாடகம்-தெலங்கானா-ஆந்திரா பகுதிகளின் மேல் வளிமண்டல மேலடுக்கு சுழற்சியம் நிலவுகின்றன. தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி காரைக்கால் பகுதிகளிலும் வரும் 19-ஆம் தேதி வரை, லேசானது முதல் மிதமான மழை நீடிக்கலாம் என்றும், அடுத்த சில நாட்களுக்கு, 50 கிலோமீட்டர் வரையிலான வேகத்தில் பலத்த தரை காற்று வீசக் கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்றைய தினம், நெல்லை மாவட்டத்தின் மலைப் பகுதிகள், கன்னியாகுமரி, தென்காசி, தேனி, ஈரோடு,கிருஷ்ணகிரி மாவட்டங்களில் கனமழைக்கும், கோவை மாவட்ட மலைப் பகுதிகள், மற்றும், நீலகிரி மாவட்டத்தில் மிக கனமழைக்கும் வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நாளையும், நாளை மறுநாளும் நீலகிரி மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் அதிகனமழை எதிர்பார்க்கப்படுகிறது. சூறாவளி காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள, தமிழகத்தின் கடலோரப் பகுதிகள், வங்க கடல் பகுதிகள் மற்றும் அரபிக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில்

அதிகபட்சமாக சென்னை நெற்குன்றம் மண்டலத்தில் 17 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

கிரிக்கெட்

ஐசிசி உலக டெஸ்ட் கிரிக்கெட் சாம்பியன் பட்டப் போட்டிகளில் ஆஸ்திரேலியா-தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையே லண்டனில் நடைபெறும் இறுதிப் போட்டியின் 3-ஆம் நாளான இன்று ஆஸ்திரேலியா அணி, 207 ரன்னுக்கு இரண்டாவது இன்னிங்ஸ் ஆட்டத்தை இழந்தது. ஆஸ்திரேலிய அணியின் முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 212 ரன், தென்னாப்பிரிக்க அணியின் முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 138 ரன்.

ஹாக்கி

**சர்வதேச ஹாக்கி கூட்டமைப்பு** சார்பில், வரும் டிசம்பர் மாதம், சிலி நாட்டின் **சாண்டியாகோ** நகரில் நடைபெற உள்ள, உலக கோப்பைக்கான **மகளிர் ஜூனியர் ஹாக்கி போட்டித் தொடரில்**, இந்திய அணி, **ஜெர்மனி-அயர்லாந்து-நமீபியா** அணிகளுடன் சேர்த்து, சி பிரிவில் இடம் பெற்றுள்ளது. தலா 4 அணிகள் அடங்கிய 6 பிரிவுகளாக, மொத்தம் 24 அணிகள், இத்தொடரில் பங்கேற்க உள்ளன. 5 முறை சாம்பியன் பட்டம் வென்ற நெதர்லாந்து அணி, ஏ-பிரிவிலும், 2 முறை சாம்பியன் பட்டம் வென்ற அர்ஜென்டினா அணி, பி-பிரிவிலும் இடம் பெற்றுள்ளன. உலக கோப்பைக்கான **மகளிர் ஜூனியர் ஹாக்கி போட்டி**களில், இந்தியா இதுவரை பட்டம் வென்றதில்லை என்றாலும், 2013-ஆம் ஆண்டில் 3-ஆம் இடமும், 2022-ஆம் ஆண்டில் 4-ஆம் இடமும் பெற்றுள்ளது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

அகமதாபாத்தில் விமான விபத்து நடந்த இடத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று நேரில் சென்று பார்வையிட்டார். மருத்துவமனைக்கும் அவர் சென்று காயம் அடைந்தவர்களை சந்தித்தார்.

விமான விபத்தில் உயிர் இழந்த முன்னாள் குஜராத் முதலமைச்சர் விஜய் ரூபானியின் குடும்பத்தினரையும் பிரதமர் சந்தித்து ஆறுதல் கூறினார்.

ஏர்-இண்டியா விமானம் விபத்துக்குள்ளானது குறித்து, விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

புதுச்சேரியில் மீன்பிடி தடைக்காலம் முடிந்து கடலுக்குச் செல்லும் விசைப் படகுகளை முதலமைச்சர் திரு ரங்கசாமி வழி அனுப்பி வைத்தார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 13.6.2025/Script.

-----------------------------